ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2163/26 - 2020 පෙබරවාරි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.20

*2163/26 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழான அறிவித்தல்

*2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதி (மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி) சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் 2019, ஒற்றோபர் 31 ஆந் திகதிய 2147/72 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளை, அதன் 4 ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) பந்தியை பின்வருமாறு பதிலீடு செய்வதன் ஊடாக திருத்தம் செய்கின்றேன்.*

*"(ஆ) 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்கள் மீது இறக்குமதி செய்யப்பட்ட 1,800 சிலின்டர் கொள்ளளவிற்கு மேற்படாத ஏதேனும் பெற்றோலினால் இயங்கும் மோட்டார் வாகனம் அல்லது 2,300 சிலின்டர் கொள்ளளவிற்கு மேற்படாத ஏதேனும் டீசலினால் இயங்கும் மோட்டார் வாகனம் அல்லது இயந்திரக் கொள்ளளவு 200 கிலோவோட்களுக்கு மேற்படாத மின்சாரத்தினால் இயங்கும் ஏதேனும் வாகனம் குறித்த நாணயக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனத்தின் விபரம் அல்லது அளவு அல்லது தொழில்நுட்பக் குறிப்பீடுகள் மற்றும் அவ் நாணயக் கடிதத்தின் பெறுமதி அல்லது அது காலாவதியாகும் திகதியை திருத்தாதிருக்கவும் மற்றும் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்தில் இருந்து விடுவித்துக் கொள்ளும் பட்சத்தில் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரிக்கு ஏற்புடைமையாகாது.".*

மஹிந்த ராஜபக்ஷ,<br>
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,<br>
கொழும்பு 01,<br>
2020, பெப்புருவரி 20.

*03-206*

1A - PG 4888 — 567 (2020/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.